மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றத்திலிருந்து தீர்ப்பு வந்தபிறகு அந்தக் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

பஞ்சாயத்துக்களில் செயல்பட்டுவரும் மகளிர் மன்றங்கள்.

172—(*வினா எண். 18150)—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்துக்களில் மகளிர் மன்றம் செயல்படுகின்றனவா?

(ஆ) அவைகளின் பணிகள் யாவை?

(இ) தமிழகத்தில் எத்தனை மகளிர் மன்றங்கள் உள்ளன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம். பஞ்சாயத்துக்களில் மகளிர் மன்றங்கள் செயல்படுகின்றன.

(ஆ) 1. முதியோர் கல்வி கற்பித்தல்

2. தையல் வேலை கற்பித்தல்

3. இதர கைத்தொழில், அதாவது ஒயர் கூடை, பை, பர்ஸ் மற்றும் லேஸ் பின்னுதல் ஆகியவை கற்றுக்கொடுத்தல்.

4. குழந்தைக் கண்காட்சிகள் நடத்துதல்

5. பயிற்சி முகாம்கள் அமைத்து சத்துணவு பற்றி கிராம பெண்களுக்கு எடுத்துரைத்தல்.

6. மகளிர் மன்ற அங்கத்தினர்களை பொது அறிவு பெறும் பொருட்டு கல்விசுற்றுலா அழைத்துச் செல்லுதல்.

(இ) தமிழகத்தில் 11,183 மகளிர் மன்றங்கள் உள்ளன.

திரு. நி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மகளிர் மன்றங்களுக்கு தையல் மெஷின்கள் கொடுக்கப்பட்டு, செயல்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், பல்வேறு இடங்களில், மகளிர் மன்றங்கள் என்ற பெயராலே செயல்படும் இடத்தில், அந்த தையல் மெஷின்களை வாங்கி மூடி வைத்திருக்கக் கூடிய சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மகளிர் மன்றங்களை பரிசீலனை செய்து அவைகளை முறையாக செயல் பாட்டிற்குக் கொண்டு வர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா என்று அறியவிரும்புகிறேன்.

1984 மார்ச் 5]

மாண்புமிகு. திருமதி. கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மகளிர் மன்றங்களில் தையல் இயந்திரங்களை வாங்கி மூடி வைத்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த இடம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களேயானால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள் - விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10—00)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் ஒவ்வொரு மகளிர் மன்றத்திற்கும் ஒரு தையல் மிஷின் கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அப்பட்டிப்பட்ட தையல் பயிற்சி எந்த யூனியனிலும் இன்றைக்கு நடைபெறவில்லை. தையல் டீச்சர்ஸ் எந்த வேலையும் செய்வதாகத் தெரியவில்லை. அப்படி வேலை செய்யவில்லையென்றால் அதுகுறித்து அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். அதோடு சுற்றுலா செல்லக்கூடிய நிலைமைகளும் இல்லை. மகளிர் மன்றங்களுக்கு கொடுக்கக்கூடிய 5 ரூபாயை வைத்து அவர்கள் என்ன பலகாரம் செய்து மற்றவர்களுக்குக் காட்டமுடியும் என்று தெரியவில்லை. ஆகவே அந்தத் தொகையை உயர்த்தவும், அவர்கள் சுற்றுலா சென்றுவரக்கூடிய முறையிலேயும் நடவடிக்கைகளை எடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்திருக்கிற விவரத்தின்படி 6 மகளிர் மன்றங்களுக்கு ஒரு தையல் ஆசிரியர் வீதம் ஊராட்சி ஒன்றியத்திற்கு 5 தையல் டீச்சர்கள் நியமிக்கப்பட்டு, ஒயர்கூடை, பை, பர்ஸ், மற்றும் லேஸ் பின்னுதல் ஆகியவை கற்றுக்கொடுக்கப்படுகின்றன, சுற்றுலா மையங்களுக்கு மகளிர் மன்ற உறுப்பினர்களை அழைத்துச் சென்று அவர்களுக்கு பொது அறிவு, கல்வி அறிவு போன்றவற்றை அளிப்பதற்கு ஏற்ற வழிவகைகளை மகளிர் மன்றங்கள் செய்து கொடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதை சமூகநலத்துறை இயக்குநர் அவர்களிடம் சொல்லி அப்படி செய்யவில்லையென்றால் அதைச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு செய்கிறேன்.